செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

சத்யமேவ ஜயதே — सत्यमेव जयते

பாரத மொழிகளின் திருவிழா
(28.09.2023-11.12.2023)
“மொழிகள் பல; உணர்வு ஒன்றே”

பயிலரங்கம்-13 நாள்: 01.11.2023

# தமிழக நாட்டுப்புற மரபுகள்

## (Folk traditions of Tamil Nadu)

(30.11.2023-06.12.2023)

## அறிவிப்பும் அழைப்பும்

நாட்டுப்புறவியல் துறை, இருபதாம் நூற்றாண்டில் உருவாகிய புதிய துறைகளுள் ஒன்றாகும். இந்தியவியல், மானிடவியல் மற்றும் மொழித்துறைகளில் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், கடந்த ஐம்பது ஆண்டுகளில் தனித்த ஆய்வுத் துறையாக வளர்ந்து நிற்கிறது. மானிடவியல், சமூகவியல், உளவியல், வரலாறு, தத்துவம், தமிழியல், மொழியியல் ஆகிய துறைகளோடு பின்னிப் பிணைந்து நிற்கிறது. மனித இன வரலாற்றில், மொழியின் தோற்றம்பற்றி உறுதியிட்டுக் கூறமுடியாத நிலை உள்ளது. அதேபோல் மக்களின் இலக்கியமான நாட்டுப்புற இலக்கியங்களின் தோற்றம் பற்றியும் அறுதியிட்டுக் கூறமுடியாது.

மனித சமுதாயத்தில் மொழியின் தோற்றம் உருவானபோதே/தன் சிந்தனைத் திறனை வளர்க்க முற்பட்டபோதே; வாய்மொழி இலக்கியங்கள் கருக்கொண்டு தோற்றம் பெற்றன எனலாம். முதலில் மாந்த இனத்தோற்றமும் அதனைத் தொடர்ந்து மொழியும் அதனைத் தொடர்ந்து வாய்மொழி மரபும் அதனைத் தொடர்ந்து எழுத்து மரபும் உருவாகியிருக்கலாம்.

நாட்டுப்புறவியலை நாட்டுப்புற மக்களின் மரபுவழிப்பட்ட படைப்புகள் (Traditional creation) என்பர். பொதுமக்களைச் சார்ந்த மரபு முறைகள் (Popular Traditions) என்ற பெயரிலும் மக்கள் இலக்கியம் (Popular literature) என்ற பெயரிலும் பொது புராணவியல் (common mythology) என்ற பெயரிலும் வழங்கி வரப்பட்டன.

**‘நாட்டுப்புற இலக்கியம் கிராமப்புற மக்களின் அனுபவங்களை மட்டுமன்றி அவர்களது உணர்வுகளையும் பிரதிபலித்து நிற்கிறது’** என இந்தியாவின் மூத்த நாட்டுப்புறவியல் பேரறிஞர் சங்கர் சென்குப்தா (Sankar sen Gupta) கூறுகின்றார்.

வாய்மொழி இலக்கியங்களே உலகில் முதலில் தோன்றின என்பதையும் எழுத்து முறை, வழக்கிற்கு வருமுன்னர் எல்லா இலக்கியங்களும் வாய்மொழி இலக்கியங்களாகவே இருந்தன என்பதையும் வரலாறு நமக்குக் காட்டுகின்றது. ஆங்கிலத்தில் Unwritten Literature, Popular Literature, Oral Literature, Primitive Literature, Folk Literature என்று குறிப்பிடுவனவெல்லாம் வாய்மொழி இலக்கியங்களேயாகும். உலகமொழிகள் பலவும் பேச்சுவழக்கற்று எழுத்தளவில் நின்றுவிட்டன. இந்நிலையில், தமிழ்மொழி பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என இரு நிலையிலும் இன்றளவும் வாழும் செம்மொழியாக இருந்து வருகின்றது. இவற்றைத் தொல்காப்பியப் பாயிரம் பின்வருமாறு கூறுகின்றது.

**“வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்**
**எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி**
**செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு”**

வாய்மொழி இலக்கியத்திற்கும் எழுத்திலக்கியத்திற்கும் கற்பனை, உவமை, உருவகம், எதுகை, மோனை, அந்தாதி போன்ற பொதுப்பண்புகள் நிறைந்திருப்பதையும் வாய்மொழி இலக்கியக் கூறான உள்ளடக்கம், வடிவக்கூறு, அமைப்புமுறை போன்றவை எழுத்திலக்கியத்தில் ஊடுருவி நிற்பதையும் காணமுடியும்.

இந்நிலையில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் **“பாரத மொழிகளின் திருவிழா”**வினை முன்னிட்டுப் (28.09.2023-11.12.2023) பல்வேறு துறைசார்ந்த நிகழ்வுகளை நடத்துகிறது. அவற்றின் ஒருபகுதியாகத் **“தமிழக நாட்டுப்புற மரபுகள்”** எனும் பொருண்மையில் தமிழக நாட்டுப்புற மரபுகளை மீட்டுருவாக்கம் செய்யும் நோக்கில் பயிலரங்கு நடக்க உள்ளது.

30.11.2023 முதல் 06.12.2023 வரை தொடர்ந்து 7 நாள்கள் இப்பயிலரங்கம் நடைபெறும். இந்த 7 நாள்களின் மாலைப் பொழுதில் பல்வேறு நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றும் நிகழ்வரங்கு நடைபெறும். நாட்டுப்புறவியல் களத்தை வளப்படுத்தும் நோக்கில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் ஆய்வாளர்கள் பங்கேற்பாளர்களாக கலந்துகொள்ளலாம்.

**பயிலரங்கின் விதிமுறைகளும், விவரங்களும் பின்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை: 30.
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 30.11.2023 முதல் 06.12.2023 முடிய ஏழு நாள்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து hsa@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/ அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக் கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/ புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
10. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதிநாள் 17.11.2023 காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.

13 பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கபட்டவர்களுக்கு 18.11.2023 அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்

………..

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை - 600100

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai - 600100


सत्यमेव जयते

பாரத மொழிகளின் திருவிழா
(28.09.2023-11.12.2023)
“மொழிகள் பல; உணர்வு ஒன்றே”

## தமிழக நாட்டுப்புற மரபுகள்
## (Folk traditions of Tamil Nadu)
(30.11.2023-06.12.2023)

**பயிலரங்கம்-13**

### விண்ணப்பப் படிவம்

<table>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">பெயர்</td><td>தமிழ்</td><td colspan="3"></td><td colspan="2" rowspan="5">நிழற்படம்</td></tr>
<tr><td>English</td><td colspan="3"></td></tr>
<tr><td>2.</td><td>முனைவர் பட்ட ஆய்வாளர்</td><td colspan="4"></td></tr>
<tr><td>3.</td><td>பிறந்த நாள் / வயது</td><td colspan="4"></td></tr>
<tr><td>4.</td><td>பாலினம்</td><td colspan="4"></td></tr>
<tr><td>5.</td><td>வகுப்பு (√ )</td><td>பொது| General</td><td></td><td>இ.பி.வ. | OBC</td><td></td><td>பட்டியல் இனம்| SC. ST</td><td></td></tr>
<tr><td>6.</td><td>கல்வித் தகுதிகள்</td><td colspan="6"></td></tr>
<tr><td>7.</td><td>முனைவர்பட்ட ஆய்வாளராக சேர்ந்த நாள்</td><td colspan="6"></td></tr>
<tr><td>8.</td><td>முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு</td><td colspan="6"></td></tr>
<tr><td>9.</td><td>துறை</td><td colspan="6"></td></tr>
<tr><td>10.</td><td>நிறுவன முகவரி (தொலைபேசி/மின்னஞ்சல் முகவரியுடன்)</td><td colspan="6"></td></tr>
<tr><td>11.</td><td>இல்ல முகவரி (தொலைபேசி/மின்னஞ்சல் முகவரியுடன்)</td><td colspan="6"></td></tr>
<tr><td>12.</td><td>புலன எண்</td><td colspan="6"></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 13. | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்துகொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக | |

நாள்: (கையொப்பம்)

இடம்:

நெறியாளர் / துறைத்தலைவர் /முதல்வர் / பதிவாளர்

உரிய முத்திரையுடன்